Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025 PW-3**

Name : பிரபாகரன்
Father / Husband name : பிரகாசம்
Village : திண்டிவனம்
Age : 32
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.01.2026

A1, A4 produced through PT Warrant. A2, A3 produced through VC. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது பழவியாபாரம் செய்கிறேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் சாட்சி செல்வம் ஆகியோர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் 1வது எதிரியை மட்டும் எனக்கு தெரியும். கடந்த 10.09.2025 அன்று மாலை 6 மணியளவில் நான் திண்டிவனம் மேம்பாலம் கீழ் பழவியாபாரம் செய்துகொண்டிருந்தேன். அப்போது 4 நபர்கள் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த 4 நபர்களில் 1வது எதிரி இருந்தார். அந்த 4 நபர்களும் தேவிடியா பையா என்று அந்த வழியாக சென்ற பொதுமக்களை அசிங்மாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது லோக்கல் காவல் நிலையத்திலிருந்து 2 போலிசார்கள் வந்து போகச்சொல்லி சொன்னார்கள். அதற்கு 4 நபர்களும் போலிசாரை பார்த்து போலிஸ்னா பேரிய பூலா போங்கடா என்று கேட்டார்கள். ரோந்து வந்த போலிசாரை சட்டையை பிடித்து இழுத்து கீழே கிடந்த கல்லை எடுத்து நாகு என்ற போலிசாரை கையில் அடித்துவிட்டு இரண்டு போலிசரையும் தள்ளிவிட்டு சென்றுவிட்டார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**1, 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தயிடம் பொதுவாக பொதுமக்கள் கூட்டம் இருப்பார்கள் என்றால் சரிதான். அதில் யார் யார் வருகிறார் என்று அதிகமாக எனக்கு தெரியாது

என்றால் சரிதான். 1வது எதிரியை இதற்கு முன்பு நான் பார்த்துள்ளேனா என்றால் இதற்கு முன்பாக அவர் அந்தயிடத்தில் கடை வியாபாரம் செய்துகொண்டிருந்தார். சண்டை நடந்தயிடத்தில் 1வது எதிரி பார்த்தாக என்னால் சொல்லயிலுமா என்றால் சண்டை நடந்தயிடத்தில் 1வது எதிரி இருந்தார். என்ன சண்டை என்று எனக்கு விவரம் தெரியாது என்றால் சரிதான், 4 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டார்கள். சம்பவ சமயத்தில் அருகிலுள்ள கடையிலுள்ள நபர்கள் சண்டையை பார்த்தார்கள் என்றால் சரிதான். ஆனால் போலிசார் அருகிலுள்ள கடையிலுள்ள நபர்களை விசாரிக்கவில்லை என்றால் தெரியாது. 1, 2 வது எதிரிகள் சண்டைபோடவில்லை, போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3, 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025 PW-4**

Name : சாந்தகுமார்
Father / Husband name : நாகமுத்து
Village : திண்டிவனம்
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.01.2026

A1, A4 produced through PT Warrant. A2, A3 produced through VC. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆட்டோ ஓட்டுநரான வேலை செய்துவருகிறேன். சாட்சி சிவா என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 10.09.2025 அன்று இரவு சண்டை நடந்ததாக மறுநாள் காலை 7 மணியளவில் டவுன் காவல் நிலையத்திலிருந்து போலிசார் திண்டிவமன் மேம்பாலத்தின் கீழுள்ள ஆட்டோ ஸ்டேண்டில் வந்து சண்டை நடந்த விவரத்தை விசாரித்து படம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள், என்னுடன் சிவா என்பவரும் கையொப்பம் செய்தார். **பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆட்டோ ஸ்டேண்டில் வந்து போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் குற்ற எண், விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எழுதாத வெள்ளித்தாளில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, படம் வரைந்து எழுதியிருந்தது. ஏற்கனவே எழுதிய ஆவணத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, படித்து

காண்பித்தார்கள், அதன்பிறகு கையொப்பம் செய்தேன். குற்ற எண், விவரம் பற்றி எனக்கு படித்து காண்பிக்கவில்லைஎ ன்றால் சரியல்ல, படித்துக்காண்பித்தார்கள், தற்போது நினைவில்லை. நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு ஆட்டோ ஸ்டேண்டில் கையொப்பம் வாங்கினாக்ள் என்று பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**3, 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025      PW-5**

Name : சிவா
Father / Husband name : கெங்கன்
Village : திண்டிவனம்
Age : 50
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.01.2026

A1, A4 produced through PT Warrant. A2, A3 produced through VC. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆட்டோ ஓட்டுநரான வேலை செய்துவருகிறேன். அ.சா.4 சந்தாகுமார் என்பவரை எனக்கு தெரியும், என்னுடன் ஆட்டோ ஓட்டுகிறார். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 11.09.2025 அன்று காலை 7 மணியளவில் திண்டிவமன் மேம்பாலத்தின் கீழ் ரவுண்டனா அகமது டீஸ்டால் எதிரில் நாங்கள் இருந்தபோது டவுன் காவல் நிலையத்திலிருந்து போலிசார் வந்து 10.09.2025 அன்று நடந்த சண்டை நடந்த விவரத்தை விசாரித்து படம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள், என்னுடன் சாந்தகுமார் என்பவரும் கையொப்பம் செய்தார். **பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆட்டோ ஸ்டேண்டில் வந்து போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் குற்ற எண், விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, குற்ற எண் 300. பொதுவாக எங்கள் ஆட்டோ ஸ்டேண்டு கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான். போலிசார் குறிப்பிட்டு எங்களிடம்

கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தோம், சாட்சியாக இருக்குமாறு கேட்டு கையொப்பம் பெற்றார்கள். நாங்கள் நின்றிருந்த இடத்திற்கு அருகில் போலிசார் வரைபடம் வரைந்தார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே வரைந்த ஆவணத்தில் கையொப்பம வாங்கினார்கள் என்றால் இல்லை, வரைபடம் வரையும்போது நாங்கள் பார்த்தோம், படித்து காண்பித்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். வரைபடத்தில் நாங்கள் நின்றிருந்த இடத்தை சம்பவயிடம் என குறித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். எங்கள் ஆட்டோ ஸ்டேண்டு சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லும் திசையில் உள்ளது என்றால் சரிதான், தனியார் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கு அருகில் உள்ளது. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை, நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு ஆட்டோ ஸ்டேண்டில் கையொப்பம் வாங்கினாக்ள் என்று பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் படித்து காண்பிக்கவில்லை, எங்கள் முன்னிலையில் வரைபடம் வரையவில்லை என்றால் சரியல்ல, நான் வரையும்போது பார்த்தேன்.

**<u>3, 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025 PW-6**

Name : திரு.முருகனாந்தம்
Father / Husband name : சாமிநாதன்
Village : திண்டிவனம்
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.01.2026

A1, A4 produced through PT Warrant. A2, A3 produced through VC. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 10.09.2025 ந்தேதி 20 மணிக்கு திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது தலைமைக்காவலர் அ.சா.1 முருகையா என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 300/2025, U/s 296(b), 126(2), 132, 121(1), 115(2),118(1),351(3) BNS ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மறுநாள் 11.09.2025 காலை 7 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சாந்தகுமார் மற்றும் சிவா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான முருகையா, நாகராஜன், பிரபாகரன், செல்வம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம்

உண்மை என தெரியவர எதிரிகளை தேட எதிரிகள் ராஜேஷ், அருண் (எ) சின்னராசு, பிரதீப்குமார் (எ) சேட்டு ஆகியோர்கள் அன்றையதினமே 12.30 மணிக்கு திண்டிவனம் காவல் நிலையம் ஆஜரானவர்களை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்றக்காவலுக்கு பாரவசம் ஒப்படைத்தேன். வழக்கின் மற்றொரு எதிரியான அப்பு (எ) ஆகாஷ் தலைமறைவு ஆகிவிட்டார். பின்னர் வழக்கில் காயம்பட்ட முருகையா என்பவருக்கு மருத்துவசிகிச்சை அளித்த உதவி மருத்துவர் துளசி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றிதழ் பெற்றேன். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தலைமறைவு எதிரியை தேடிச்சென்றதில் அவரைபற்றி எந்த புலனும் கிடைக்காதால் 1வது எதிரி தலைமறைவாகியிருந்த நிலையில் வழக்கின் விசாரணையை முடித்து 1வது எதிரியின் மீது U/s 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1),351(3) BNS ன் படியும், 2 - 3 எதிரிகள் மீது U/s 296(b), 126(2), 132, 121(1), 115(2), 351(3) BNS ன் படியும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து 27.11.2025 அன்று தாக்கல் செய்தேன்.

<u>1, 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கின் புகார் இரவு 8 மணியளவில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மறுநாள் இரவு 7 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், எதிரிகள் அடைப்புக்காவலுடன் அனுப்பப்பட்டுள்ளது. அ.சா.1 இரவு 10 மணிக்கு சென்று மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா.1 ஐ சிகிச்சைக்கு அழைத்துச்சென்ற நண்பர் பாரதிதாசன் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், அதுவழக்கிற்கு தேவைப்படவில்லை. இரவு 10 மணிக்கு முன்பாக அ.சா.1 வுடன் இருந்த யாரும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவில்லை என்றால் சரிதான், புகார் கொடுத்த பிறகு மருத்துவமனைக்கு சென்றார். புகார் கொடுத்து 2 மணி நேரம்

கழித்து மருத்துவமனைக்கு சென்று விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் நாகராஜன் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் காவல் நிலையம் அழைத்துவந்ததாக உள்ளது, அந்த பொதுமக்களின் விவரம் கேட்டு பதிவு செய்தேனா என்றால் இல்லை. சம்பவம் எதுவும் நடக்கவில்லை, அதனால் தான் பொதுமக்களை குறிப்பிட்டு சொல்லயியலவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் 14 வது காலத்தில் புகார்தாரரின் கையொப்பம் பெறவில்லை என்றால் புகார் கொடுத்து மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாலும், வேறு பணிக்கு சென்றதாலும் கையொப்பம் வாங்கவில்லை. இந்த வழக்கில் அவசர எண் 100 லிருந்து புகார் வந்துள்ளது, யார் தகவல் கொடுத்தார் என்று விசாரித்தேனா என்றால் அவசர எண்ணிற்கு அழைக்கப்படும் நபரின் விவரம் இரகசியமாக வைக்கப்படும். சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் அவசர எண்ணிக்கு தகவல் வந்த நேரம் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>**3, 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.